www.tamilarangam.net

# ஐரோப்பாவில் சிவத்தம்பி

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய உறுப்பினரும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான 'பேராசிரியர்' சிவத்தம்பி புலிகளின் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி இன்று ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் மேற்கொள்கின்றார்.

தமிழ் புத்திஜீவிகள் மத்தியில் பிரபலமான இவர் யாழ்பாணத்தில் இருந்து கொண்டு பல அரசியல் ஆய்வுக்கட்டுரைகள் எழுதவும், பொதுக்கூட்டங்களில் உரையாற்றவும் புலிகள் ஏன் அனுமதிக்கிறார்கள் என்பது கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும். ஏனெனில் ஒரு வார்த்தை எழுதியதற்காகவோ, வாய் திறந்து கதைத்ததற்காகவோ 5000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் புலிகளால் கைது செய்யப்பட்டு வதைமுகாம்களில் சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் பகுதிகளில் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்திற்காக போராடிய விமலேஸ்வரன் புலிகளினால் கொலை செய்யப்பட்டதில் சிவத்தம்பிக்கும் பங்குண்டு. மார்க்சிசத்தைக் கதைப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் காட்டிய சிவத்தம்பி ஈழப்போராட்டத்தின் எந்த நிகழ்விலும் தன்னை ஈடுபடுத்தவில்லை.

சேரனின் கவிதைகளை மார்க்சிசக் கவிதைகள் என ஆய்வு செய்த சிவத்தம்பி இது தொடர்பாக "புதிசு" சஞ்சிகையில் வந்த விமர்சனத்திற்கு பதிலளிக்காமல் தனது மார்க்சிச வறுமையைக் காட்டிக் கொண்டார்.

எல்.ரி.ரி.ஈ முதல் என்.எல்.எப்.ரி வரை எல்லா இயக்கங்களையும் சந்தித்து "எல்லோருடனும்" நட்புறவை ஏற்படுத்தி அவர்கள் எல்லோருக்குமே அரசியல் ஆலோசகராகச் செயற்பட முற்பட்டவர் தான் இந்த சிவத்தம்பி. எல்லா இயக்கங்களிடமும் அவர்களின் அரசியலை நியாயப்படுத்தி தனக்கு புகலிடம் தேடினார் இவர். இன்று பிரபாகரனின் உறவினரெனத் தன்னை அறிமுகம் செய்து கொண்டு புலிகளுடன் இரண்டறக் கலந்து விட்டார். இந்த நிலையில் இவரின் ஐரோப்பிய சுற்றுப்பயணம் புலிகளுக்கானதும், இவருக்கானதுமேயொழிய மக்களுக்கானதல்ல என்பது தெளிவானதே.

புலிகள் விஜிதரனை கடத்தியதை எதிர்த்து மாணவர்கள் நடாத்திய போராட்டத்தில் சிவத்தம்பி தலைமையிலான ஆசிரியர்குழு நியாயத்தின் பக்கமாக நில்லாது நடுநிலைவாதிகளாக தம்மைக் காட்டி போராட்டத்தைக் கைவிடக் கோரினர். அத்துடன் போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் தங்கள் பட்டங்களை இழக்க வேண்டி வருமென்றும் மிரட்டினர். இதற்குப் பின்னராக விமலேஸ்வரன் கொலையின் போதும், இன்னும் பலர் கைது செய்யப்பட்ட போதும், மாணவர்கள் போராடிய போது அதற்கெதிராகவும், புலிகளுக்குச் சார்பாகவும் சிவத்தம்பி செயல்பட்டார்.

பசிக்காக மரவள்ளிக் கிழங்கு இழுத்தவன் முதல் வறுமையில் வாடிய பலரையும் "சமூகவிரோதி" என்று முத்திரை குத்தி தமிழ் இயக்கங்கள் கொலை செய்து குவித்தன. அதேநேரம் சமூகத்தில் மேல் மட்டத்தில் இருந்த பலர் ஊழல், கொள்ளைகளில் ஈடுபட்ட போது இந்த இயக்கங்கள் அவர்களுக்கு பாதுகாப்பளித்ததுடன் அவர்களின் வளர்ப்புப் பிராணிகளாகவும் இயங்கினர். கூட்டுறவுச்சங்கப் பணத்தை கொள்ளையடித்த சிவமகர்ராசா தான் புலிகளின் பிரஜை பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தார். ஊழல் ஒன்றில் கையும் களவுமாகப் பிடிபட்ட சிவத்தம்பி தான் புலிகளின் பேச்சாளர். இவர்கள் மீதெல்லாம் புலிகளின் விசாரணை நடைபெற மாட்டாது. ஏனெனில் புலிகளுக்கு வேண்டியவர்கள் இப்படியானவர்களே.

பல்கலைக்கழக பதவிகளின் பெருமைகளாலும், ஆய்வு நூல்கள் எழுதிக் கிடைத்தப் புகழாலும் தம்மைச் சுற்றிப் பொன்னுடை போர்த்திக் கொண்டு அப்பாவி மக்களினதும் போராளிகளினதும் மரணத்தில் குளிர் காயும் சிவத்தம்பிகளை அடையாளம் கண்டு கொள்வோம்.

வெளியீடு – தூண்டில் (ஜெர்மனி) | சமர் (பிரான்ஸ்)

"THOONDIL"
GROSSE HEIMSTR 58
4600 DORTMUND 1
GERMANY

"SAMAR"
87 RUE DE COLOMBES
92600 ASNIERES S/SEINE
FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்